அத்தனகல்ல பிரதேச சபை - 2024

----

1. நிதிக்கூற்றுக்கள்

1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

அத்தனகல்ல பிரதேச சபையின் 2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறான சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் கூற்று, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான விரிவான வருமானக் கூற்று, தேறிய சொத்துக்கள்/ உரிமை மூலதன மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளுக்குரிய தகவல்களையும் உள்ளடக்கிய நிதிக்கூற்றுக்களுக்குரிய குறிப்புக்களுடன் கூடிய 2024 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் அதிகாரச்சட்டத்தின் 172(1) உப பிரிவு மற்றும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 10(1) உப பிரிவுடனும் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புக்கள் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களிலிருந்தான தாக்கத்தைத் தவிர்த்து நிதிக்கூற்றுக்கள் அத்தனகல்ல பிரதேச சபையின் 2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் உள்ளூராட்சி நிறுவனங்களுக்கான இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டுள்ளன என்பது எனது அபிப்பிராயமாகும்.

1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இக.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். இக் கணக்காய்வு நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக் கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

இந்நிதிக்கூற்றுக்களை உள்ளூராட்சி நிறுவனங்களுக்கான இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

பிரதேச சபையின் நிதி அறிக்கையிடல் செயன்முறை தொடர்பான பொறுப்பு, அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களினால் ஏற்கப்படும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் சபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பான புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

1.4 கணக்காய்வின் விடயப்பரப்பு (நிதிக்கூற்றுக்கள் கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்பு)

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடி அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்தில் கொள்ளப்படல் வேண்டும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் என்னால் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி பிரதேச சபை உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- முகாமைத்துவத்தால் பின்பற்றப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் பயன்படுத்திய கணக்கீட்டு மதிப்பீடுகள் மற்றும் தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் நியாயமாகவும் மதிப்பீடு செய்தல்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதா என்பதனை மதிப்பீடு செய்தல்.

இயலுமான வரையிலும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்காக விடயப்பரப்பு விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்கள் சமர்ப்பித்தல் தொடர்பாக பார்க்கும் போது பிரதேச சபையின் செயற்பாடுகள் தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யப்படக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமாக பேணிச்செல்லப்படுகின்றதா எனவும்

- ஏதேனும் உரிய எழுத்துமூல சட்டத்திற்கோ அல்லது பிரதேச சபையின் நிர்வாக சபையினால் வழங்கப்பட்ட பொது அல்லது விசேட ஏற்பாடுகளுக்கு இணங்க மன்றம் செயற்படுகின்றதா எனவும்

- தனது அதிகாரங்கள், இலக்குகள் மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும்

- வளங்கள் சிக்கனமாக, செயற்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் காலஎல்லைக்குள் மற்றும் உரிய சட்ட விதிகளுக்கு இணங்க பெறுகை செய்யப்பட்டுள்ளதாகவும்

1.5 ஏனைய சட்டத் தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் குறிப்பிடப்பட்ட தேவைகள் தொடர்பான விசேட ஏற்பாடுகள் உள்ளடங்கியுள்ளது.

(அ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 6(1)(ஈ)(iii) ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாடுகளின் பிரகாரம் பிரதேச சபையின் நிதிக் கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் இணங்குவதாக உள்ளது.

(ஆ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 6(1)(ஈ)(iv) ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்ட தேவைப்பாடுகளின் பிரகாரம் முன்னைய ஆண்டின் போது என்னால் மேற்கொள்ளப்பட்டிருந்த பரிந்துரைகள் சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களில் உள்ளடங்கியுள்ளது.

1.6 நிதிக்கூற்றுக்கள் தயாரித்தல் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்

1.6.1 உள்ளூராட்சி நிறுவனங்களுக்கான இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுடன் இணங்காமை

	உரிய நியமங்களுடனான தொடர்புடன் இணங்காமை	சபையின் கருத்துரைகள்	பரிந்துரைகள்
(அ)	நியமத்தின் 3 ஆம் அத்தியாயத்தின் 3.32 ஆம் பந்தியின் பிரகாரம் செயற்பாட்டு நடவடிக்கைகளில் இருந்தான தேறிய காசுப் பாய்ச்சல் கணிப்பிடும் போது மீளாய்வாண்டின் மிகைக்காக சீராக்கப்பட வேண்டிய பெறுமானத் தேய்வுப் பெறுமதி ரூபா 73,825,481 ஆக இருந்த போதிலும் அது ரூபா 73,811,422 ஆக ரூபா 14,059 குறைத்தும், சொத்துக்கள் அகற்றுதலின் நட்டம் ரூபா 126,527 ஆக இருந்த போதிலும் அது ரூபா 250,085 ஆக ரூபா 123,558 அதிகரித்தும் சீராக்கப்பட்டிருந்தமையும் மற்றும் காணி கையளித்தல் அடிப்படையில் இலாபம் ரூபா 8,201,550 சீராக்கப்படாமல் காணப்பட்டது.	திருத்தப்பட்ட காசுப் பாய்ச்சல் கூற்று தயாரித்து சமர்ப்பிக்கப்படும்.	நியமத்தின் பிரகாரம் காசுப் பாய்ச்சல் கூற்று தயாரிக்கப்படல் வேண்டும்.
(ஆ)	நியமத்தின் 3 ஆம் அத்தியாயத்தின் 3.29 ஆம் பந்தியின் பிரகாரம் முதலீட்டு செயற்பாடுகளில் இருந்தான தேறிய காசுப் பாய்ச்சல் கணிப்பிடும் போது காணி கையளித்ததலால் கிடைக்கப் பெற்ற தொகை ரூபா 8,311,050 சீராக்கப்படாமல்,	திருத்தப்பட்ட காசுப் பாய்ச்சல் கூற்று தயாரித்து சமர்ப்பிக்கப்படும்.	நியமத்தின் பிரகாரம் காசுப் பாய்ச்சல் கூற்று தயாரிக்கப்படல் வேண்டும்.

நிலையான வைப்பு வட்டி ரூபா 4,298,464 ஆக இருந்த போதிலும் அது ரூபா 4,150,078 ஆக ரூபா 148,386 குறைத்து சீராக்கப்பட்டமை மற்றும் ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்களின் கொள்வனவு ரூபா 233,924,000 ஆக இருந்த போதிலும் அது ரூபா 347,818,987 ஆக ரூபா 113,894,987 அதிகரித்தும் சீராக்கப்பட்டிருந்தது.

1.6.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

கணக்காய்வு அவதானிப்புக்கள்	சபையின் கருத்துரைகள்	பரிந்துரைகள்
வேலை கடன் பட்டோர் மீதி மற்றும் மூலதன மாணிய மீதி ரூபா 6,697,684 அதிகரித்துக் கணக்கீடு செய்யப்பட்டிருந்தது.	2025 இன் நிதிக் கூற்றுக்கள் தயாரிக்கும் போது சரி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.	சரியான பெறுமதியில் கணக்கீடு செய்தல் வேண்டும்.

1.6.3 இணக்கம் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள்

கணக்காய்வு அவதானிப்புக்கள்	சபையின் கருத்துரைகள்	பரிந்துரைகள்
பொருள் வழங்கல் கடன் கொடுத்தோர் மீதி நிதிக் கூற்றுக்களின் பிரகாரமான மீதிக்கும், நேரொத்த அறிக்கையின் பிரகாரமான மீதிக்கும் இடையே ரூபா 154,000 வேறுபாடு அவதானிக்கப்பட்டது.	எதிர்காலத்தில் சரி செய்யப்படும்.	பட்டோலைகள் நாளது வரையாக்கி அதன் பிரகாரம் நிதிக்கூற்றுக்கள் தயாரித்தல் வேண்டும். பிழைகள் சரி செய்யப்படல் வேண்டும்.

1.7.1 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் இணங்காமை

சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவவ தீர்மானங்களுடன் இணங்காமை சந்தர்ப்பங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

	சட்டங்கள் விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான தொடர்பு	இணக்கமின்மை	சபையின் கருத்துரைகள்	பரிந்துரைகள்
(அ)	இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப்பிரமாணம் 571(i)	பெறுமதி ரூபா 2,877,450 ஆன வைப்புக்கள் ஓய்வு பெறச் செய்யப்பட்டிருக்க வில்லை.	02 மாதங்களில் சரி செய்யப்படும்.	நிதிப்பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.
(ஆ)	2019 திசெம்பர் 24 ஆந் திகதிய இலக்கம் 2155/8 என்ற அதிவிசேட வர்த்தமாணியின் மூலம் விதிக்கப்பட்ட மேல் மாகாண பிரதேச சபை நிதி நிர்வாகத்திற்கு உரிய கணக்கீட்டு நடவடிக்கைகள் தொடர்பான விதி இலக்கம் 83(ii)	ஊழியர் கடனுக்காக தனிப்பட்ட முற்பண கணக்கு பேணிச் செல்லப்பட்டிருக்க வில்லை.	கட்டுப்பாட்டுக் கணக்குகளின் கீழ் பேணிச் செல்லப்பட்டுள்ளது.	விதிகளின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

2. நிதி மீளாய்வு

2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக் கூற்றுக்களின் பிரகாரம் 2024 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான சபையின் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 76,992,178 ஆக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 72,539,698 ஆகும்.

2.2 வருமான நிர்வாகம்

2.2.1 மதிப்பீடு செய்யப்பட்ட வருமானம், சிட்டையிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

செயலாளரால் சமர்ப்பிக்கப்பட்ட தகவல்களின் பிரகாரம் மீளாய்வாண்டிற்கும், முன்னைய ஆண்டிற்கும் உரியதாக சமர்ப்பிக்கப்பட்ட மதிப்பீடு செய்யப்பட்ட வருமானம், சிட்டையிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

		2024				2023			
	வருமானமான மூலம்	மதிப்பீடு செய்யப்பட்ட வருமானம்	சிட்டையிடப்பட்ட வருமானம்	சேகரிக்கப்பட்ட வருமானம்	திசெம்பர் 31 இல் மொத்த நிலுவை	மதிப்பீடு செய்யப்பட்ட வருமானம்	சிட்டையிடப்பட்ட வருமானம்	சேகரிக்கப்பட்ட வருமானம்	திசெம்பர் 31 இல் மொத்த நிலுவை
		ரூபா(000)	ரூபா(000)	ரூபா(000)	ரூபா(000)	ரூபா(000)	ரூபா(000)	ரூபா(000)	ரூபா(000)
i.	ஆதன வரியும் வரியும்	35,071	34,239	31,707	26,785	34,589	35,475	32,386	26,783
ii.	வாடகை	38,532	32,986	37,238	26,729	40,420	31,810	34,438	31,594
iii.	அனுமதிப்பத் திரக் கட்டணம்	2,483	1,889	1,889	-	1,654	1,917	1,917	-
iv	ஏனைய வருமானம்	173,752	173,761	176,591	13,876	188,315	170,248	157,279	16,998
		249,838	242,875	247,425	67,390	264,978	239,450	226,020	75,375

2.2.2 வருமான சேகரித்தலின் செயலாற்றல்

சபையின் வருமான சேகரித்தலின் செயலாற்றல் தொடர்பில் பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

	கணக்காய்வு அவதானிப்புக்கள்	சபையின் கருத்துரைகள்	பரிந்துரைகள்
(அ)	**ஆதனவரி**		
	மீளாய்வாண்டின் இறுதியில் உள்ளவாறு நிலுவை ஆதனவரி மீதி ரூபா 26,714,898 ஆக இருந்ததுடன் அதில் 10 வருடங்களுக்கு மேற்பட்ட ரூபா 2,103,251 உம், 05 இற்கும் 10 வருடங்களுக்கும் இடையில் ரூபா 10,007,800 உம், 03 இற்கும் 05 வருடங்களுக்கும் இடையில் ரூபா 5,537,279 உம், 01 இற்கும் 03 வருடங்களுக்கு இடையில் ரூபா 6,534,870 உம் காணப்பட்டது.	அறவிடுவதற்காக நிகழ்ச்சித் திட்டங்களை அமுல்படுத்தி பதிவேடுகளில் உள்ள வழுக்களும் சரி செய்யப்படும்.	நிலுவை ஆதனவரி வருமானம் தாமதம் இன்றி அறவிடப்படல் வேண்டும்.

(ஆ)	**வாடகை** மீளாய்வாண்டின் இறுதியில் உள்ளவாறு நிலுவைக் கடை வாடகை ரூபா 26,535,374 ஆக இருந்ததுடன் அதில் 05 இற்கும் 10 வருடங்களுக்கும் இடையில் ரூபா 311,410 உம், 03 இற்கும் 05 வருடங்களுக்கும் இடையில் ரூபா 4,582,795 உம், 01 இற்கும் 03 வருடங்களுக்கும் இடையில் 18,722,965 உம் காணப்பட்டது.	2025 மார்ச் 31 இல் உள்ளவாறு ரூபா 1,898,850 அறவிடப்பட்டுள்ளது.	நிலுவைக் கடை வாடகை வருமானம் விரைவாக அறவிடப்படல் வேண்டும்.

3. செயற்பாட்டு மீளாய்வு

3.1 சட்டத்தினால் கையளிக்கப்பட்ட பணிகளை நிறைவேற்றுதல்

பிரதேச சபைகள் சட்டத்தின் 3 ஆவது பிரிவின் கீழ் பொதுமக்கள் சுகாதாரம், பொது பயன்பாட்டுச் சேவைகள் மற்றும் பொது வீதிகள் தொடர்பான விடயங்களை முறைப்படுத்தல் மற்றும் நிர்வகித்தல், பொதுமக்களின் பொழுதுபோக்கு வசதிகள் மற்றும் நலன்புரி போன்ற சபையினால் நிறைவேற்ற வேண்டியிருந்த குறிக்கோள்களை நிறைவேற்றுதல் தொடர்பாக அவதானிக்கப்பட்ட விடயங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

	கணக்காய்வு அவதானிப்புக்கள்	சபையின் கருத்துரைகள்	பரிந்துரைகள்
(அ)	நீர்க்குழாய் பழுதடைந்த 02 வீதிகளுக்கு கொங்கிரீட் இடுவதற்காக நீர் வழங்கல் மற்றும் நீர் வடிகால் அமைப்புச் சபையின் மூலம் 2019 ஆம் ஆண்டில் ரூபா 30,863,182 தொகையும் 2023 ஆம் ஆண்டின் போது ரூபா 1,884,004 தொகையும் வழங்கப்பட்டிருந்ததுடன் அந்த பணத்தை இலக்கிடப்பட்ட பணிகளுக்கு ஈடுபடுத்தாமல் 2021 ஆம் ஆண்டின் போது நிலையான வைப்பில் ரூபா 10 மில்லியன் வைப்புச் செய்யப்பட்டு மிகுதி பணம் சபையின் செலவினங்களை மீளளிப்புச் செய்வதற்காக பயன்படுத்தப்பட்டிருந்தது. 2023 மற்றும் 2024 ஆம் ஆண்டுகளின் போது அந்த 02 வீதிகளை அபிவிருத்தி செய்து அதற்காக ரூபா 28,812,000 செலுத்தப்பட்டிருந்ததுடன் மேலும் ரூபா 3,935,186 எஞ்சியிருந்தது. நிதி கிடைத்த ஆண்டின் போது செயலாற்றல் நடவடிக்கைகள் மேற்கொள்ளாமையின் காரணமாக 2024 ஒக்தோபர் 21 ஆந் திகதி வரையில் பூர்த்தி செய்வதற்கு எதிர்பார்க்கப்பட்ட 1400 மீற்றர் அளவிலான தூரம் பூர்த்தி செய்ய முடியாது இருந்தது.	நீர்க்குழாய் பதித்தல் பூர்த்தி செய்யப்பட்டு வீதிகள் கையளிப்பதில் தாமதம் ஏற்பட்டமையால் வீதி அமைத்தல் 2023 மற்றும் 2024 ஆம் ஆண்டுகளின் போது மேற்கொள்ளப்பட்டதுடன் மிகுதி வீதி பகுதி கையளிக்கப்பட்ட பின்னர் தயாரிக்கப்படும்.	நிதி நோக்கங்கள் இடப்பட்ட பணிகளுக்காக பொது மக்களுக்கு ஆகக் கூடிய சேவையினை வழங்குதல் வேண்டும்.
(ஆ)	மீளாய்வாண்டு வரையில் சபைக்கு 595 பொது மக்கள் முறைப்பாடுகள் கிடைக்கப் பெற்றதுடன் அந்த முறைப்பாடுகளில் 369 தீர்த்து வைக்கப்பட்டிருக்கவில்லை.	தீர்த்து வைக்கப்படுகின்ற முறைப்பாடுகளின் எண்ணிக்கை 226 ஆகும்.	பொது மக்கள் முறைப்பாடுகளுக்கு கவனம் செலுத்தி மக்களின் சேவைகளை முறைமைப்படுத்துதல் வேண்டும்.

3.2 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

	கணக்காய்வு அவதானிப்புக்கள்	சபையின் கருத்துரைகள்	பரிந்துரைகள்
(அ)	மீளாய்வாண்டின் இறுதியில் உள்ளவாறு காணப்பட்ட ரூபா 2,650,335 நிலுவைக் கடன் பட்டோர் மீதியில் 05 வருடங்களுக்கு மேற்பட்ட ரூபா 2,538,040 உம், 03 வருடங்களுக்கும் 05 வருடங்களுக்கும் இடையில் ரூபா 56,156 தொகையும், 01 வருடத்திற்கு குறைந்த ரூபா 56,140 உம் ஆகும். 05 வருடங்களுக்கு மேற்பட்ட கடன் மீதியில் இலக்கம் 39/980 என்ற வழக்கு தீர்ப்பின் பிரகாரம் 2019 மே 15 ஆம் திகதி சபை நிதியத்தில் இருந்து முறைப்பாட்டு தரப்பினருக்கு செலுத்தப்பட்டிருந்த பிரதிவாதியிடம் இருந்து அறவிட வேண்டியதாகக் காணப்பட்ட ரூபா 1,876,800 மற்றும் மீளளிப்புச் செய்ய முடியாத பட்டதாரி படிகள் செலுத்துதல் ரூபா 649,348 உம் அறவிட வேண்டி இருந்தது.	வழக்கு தீர்ப்பின் ஆலோசனையைப் பெறப்படுவதுடன் 05 பட்டதாரிகளிடம் சம்பளத்தை மீளளிப்புச் செய்யப்படாது இருந்த போதிலும் உத்தியோகபூர்வ உடைப் படி அறவிடப்பட்டுள்ளது.	கிடைக்க வேண்டிய மீதிகளை விரைவாக அறவிடுதல் வேண்டும்.
(ஆ)	22 கடைகளுக்கு உரிய 10 வருடங்களுக்கு முன்னிருந்து கொண்டு வரப்படுகின்ற நிலுவை முற்பண நிலுவை மீதி ரூபா 3,127,280 ஆகும்.	08 கடைகள் சபைக்குக் கையேற்று நிலுவைப் பணத்தை செலுத்துமாறு அறிவிக்கப்பட்டதுடன் உடன்படிக்கை மேற்கொள்ளப்படவில்லை.	முறையான உடன்படிக்கை கைச்சாத்திட்டு உடன்படிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.
(இ)	சந்தைத் தொகுதியின் 04 சந்தைத் தொகுதிகளுக்கு உரிய 33 கடைகள் ஒரு வருடத்திற்கு மேற்பட்ட காலம் உப வாடகை நிலுவை மீதி ரூபா 10,215,250 ஆகும்.	11 உப வாடகை யாளர்களுக்கு வழக்கு தொடரப்பட்டு 11 பேர்களுக்கும் இறுதி அறிவித்தல் அனுப்பப்பட்டுள்ளதுடன் 08 இற்கு மொத்த நிலுவை பணம் செலுத்தி 03 சபைக்கு கையேற்க வேண்டியுள்ளது.	உடன்படிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுத்து உப வாடகைப் பணம் அறவிடப்படல் வேண்டும்.
(ஈ)	2020 ஆம் ஆண்டு முதல் 2023 ஆம் ஆண்டு வரையான காலத்தில் ஊழியர் சேமலாப நிதியம், ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியம் மற்றும் ஓய்வூதியத் திணைக்களம் போன்ற நிறுவனங்களில் இருந்து கிடைத்த நலன்கள் ரூபா 568,723 உரிய உரிமையாளர்களுக்கு வழங்கப்படாமல் மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் பொது	ரூபா 404,849 தொகை 2025 ஆம் ஆண்டின் வருமானத்திற்கு எடுக்கப்பட்டுள்ளதுடன் ரூபா 163,873 வருமானத்திற்கு எடுக்கப்பட்டுள்ளது.	நலன்கள் உரிமையாளர்கள் தொடர்பாக கண்டறிந்து தீர்த்து வைப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

வைப்புக் கணக்கில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தது.	

3.3 செயற்பாட்டு செயற்திறனின்மைகள்

கணக்காய்வு அவதானிப்புக்கள்	சபையின் கருத்துரைகள்	பரிந்துரைகள்
101 வியாபார நிலையங்களுக்கு உடன்படிக்கைக் கைச்சாத்திடாமலும் 44 வியாபார நிலையங்களுக்கு உடன்படிக்கை நாளது வரையாக்காமலும் நடாத்திச் செல்லப்படுகின்றமை அவதானிக்கப்பட்டது.	கடை உரிமையாளருக்கு அறிவித்து கடைகள் கையேற்கப்படும்.	முறையான உடன்படிக்கையின் அடிப்படையில் சொத்துக்கள் வாடகைக்கு வழங்குதல் மேற்கொள்ளப்படல் வேண்டும்.

3.4 விளைவற்ற அல்லது குறைவாகப் பயன்படுத்தப்பட்ட ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்கள்

	கணக்காய்வு அவதானிப்புக்கள்	சபையின் கருத்துரைகள்	பரிந்துரைகள்
(அ)	பெறுமதி ரூபா 2,781,227 ஆன களஞ்சிய இருப்பில் 39 விடயங்கள் 02 வருடங்களுக்கு மேற்பட்ட காலம் முதல் விளைவற்றுக் காணப்பட்டது.	பகுதி ஒன்று 2025 ஆம் ஆண்டின் போது விநியோகிப்பதற்கும் 2024 இன் மெய்மையாய்வில் விற்றுத் தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டதுடன் பயன்பாட்டுக்கு எடுக்கப்படாமையினால் சில விடயங்கள் எஞ்சியிருந்தது.	சபையின் சொத்துக்களை ஆக்கபூர்வமான பயன்படுத்துவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.
(ஆ)	அரைவாசி பூர்த்தி செய்யப்பட்ட பெறுமதி ரூபா 5,909,944 ஆன 06 கட்டிடங்கள் 01 வருடத்திற்கு மேற்பட்ட காலம் முதல் விளைவற்றுக் காணப்பட்டது.	02 சனசமூக மண்டபங்களுக்காக 2025 ஆம் ஆண்டில் நிதியேற்பாடு ஒதுக்கப்பட்டுள்ளது.	தேவை உரிய பிரகாரம் இனங்கண்டு இலக்கிடப்பட்ட நோக்கங்களை நிறைவேற்றும் வகையில் பொது மக்கள் நிதி பயன்படுத்தப்படல் வேண்டும்.

3.5 சொத்துக்கள் முகாமைத்துவம்

	கணக்காய்வு அவதானிப்புக்கள்	சபையின் கருத்துரைகள்	பரிந்துரைகள்
(அ)	பெறுமதி ரூபா 568,828,482 ஆன 182 காணிக் கூறுகளின் உரித்து உறுதிப்படுத்தப்பட்டிருக்க வில்லை.	சொத்துப் பதிவேடுகளில் உள்ள தரவுகளின் அடிப்படையில் உரித்து உறுதிகளைப் பெறுதல் கஷ்டமாக இருந்ததுடன் சட்ட ஆலோசனையை பெற்று மிகுதி நடவடிக்கை எடுக்கப்படும்.	சபைக்குரிய காணிகளின் உரித்து கையேற்கப்படல் வேண்டும்.
(ஆ)	1995 மற்றும் 2006 ஆம் ஆண்டுகளின் போது நன்கொடையாகக் கிடைக்கப் பெற்ற கிரயம் ரூபா 1,900,000 ஆன 02 டெக்டர் கையேற்கப்பட்டிருக்கவில்லை.	கையேற்பதற்காக அறிவிக்கப்பட்டுள்ளது.	வாகனங்களின் உரித்து கையேற்கப்படல் வேண்டும்.

(இ)	ரூபா 8,395,462 ஆன 08 கட்டிடங்களில் இரண்டு மாடிக் கட்டிடமாக பூர்த்தி செய்வதற்கு திட்டமிடப்பட்டு தரை மாடி நிர்மாணிக்கப்பட்டிருந்தது. 01 வருடத்திற்கு மேற்பட்ட காலம் கடந்திருந்த போதும் மேற்கூறப்பட்ட மேல் மாடி நிர்மாணிக்கப்படாமையின் காரணமாக சிலப் கூரை நீண்டகாலமாக மழைக்கு உட்பட்டிருந்தது.	இறுதி நடவடிக்கைகள் பூர்த்தி செய்யப்படும்.	தேவையை உரிய பிரகாரம் இனங்கண்டு கட்டிடத்தை நிர்மாணித்து சொத்துக்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்தும் வகையில் நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

3.6 மனிதவள முகாமைத்துவம்

	கணக்காய்வு அவதானிப்புக்கள்	சபையின் கருத்துரைகள்	பரிந்துரைகள்
(அ)	151 கிராம சேவகர் பிரிவுகள் மற்றும் 05 உபஅலுவலகங்களை உள்ளடக்கிய பிரதேச சபைக்கு வருமானப் பரிசோதகர் எண்ணிக்கை 06 அங்கீகரிக்கப்பட்டிருந்த போதிலும் 05 வெற்றிடங்கள் காணப்பட்டதுடன் சபையின் கீழ் அமுல்படுத்தப்படுகின்ற 11 நூலகங்களுக்காக அங்கீகரிக்கப்பட்ட நூலகர் பதவிகளின் எண்ணிக்கை 07 ஆக இருந்த போதிலும் 02 வெற்றிடங்கள் காணப்பட்டது.	காலாண்டு அறிக்கை மூலம் இந்த வெற்றிடங்கள் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.	வெற்றிடங்களை நிரப்பி மக்களின் சேவையினை முறையாக நிறைவேற்றுதல் வேண்டும்.
(ஆ)	சபையில் மரணமடைந்த மற்றும் சேவையை விட்டுச் சென்ற 14 உத்தியோகத்தர்களிடம் இருந்து ரூபா 1,355,549 ஊழியர் கடன் மீதி ஒன்று அறவிட வேண்டியிருந்தது.	பணிக்கொடை நிதியில் இருந்து அறவிடுவதற்கும் அறவிட முடியாக் கடனாக பதிவழிப்பதற்கும் நடவடிக்கை எடுக்கப்படுகின்றது.	ஊழியர் கடன் விரைவாக அறவிடப்படல் வேண்டும்.

4. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

4.1 வருடாந்த செயல் நடவடிக்கைத் திட்டம்

கணக்காய்வு அவதானிப்புக்கள்	சபையின் கருத்துரைகள்	பரிந்துரைகள்
2024 ஆம் ஆண்டின் செயல் நடவடிக்கைத் திட்டத்தில் உள்ளடக்கப்பட்ட ரூபா 3,100,000 ஆன 04 செயற்திட்டங்கள் பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை.	தேவையான வளங்கள் காணப்படாமையினால் மேற்கொள்ள முடியாது இருந்தது.	தேவையான வளங்களை உரிய பிரகாரம் இனங்கண்டு திட்டங்கள் தயாரித்து பொது மக்களின் பணத்தை உச்ச அளவில் செயற்திறனாக பயன்படுத்துதல் வேண்டும்.

4.2 பாதீட்டுக் கட்டுப்பாடு

கணக்காய்வு அவதானிப்புக்கள்	சபையின் கருத்துரைகள்	பரிந்துரைகள்
மீண்டெழும் செலவின விடயங்கள் 13 இற்காக ஒதுக்கப்பட்ட ரூபா 9,600,000 மொத்த நிதியேற்பாடும் சேமிக்கப்பட்டிருந்தது.	பழுது பார்க்கப்படாமை, காலம் போதியளவில் காணப்படாமை, தகவல்கள் காணப்படாமை, ஆலோசனையாளர்கள் முன்வராமை மற்றும் உறுதிச் சீட்டுக்கள் சமர்ப்பிக்கப்படாமை போன்ற காரணங்களால் ஏற்பட்டு இருந்து.	பாதீடு ஆக்கபூர்வமான கட்டுப்பாட்டுக் கருவியாகப் பயன்படுத்தப்படல் வேண்டும்.